# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை
# சட்ட பீடம்
## சட்டமாணி (மீள்) பரீட்சை - ஆண்டு I, 2018
## குற்றவியல் சட்டம் (CRIMINAL LAW)

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய முதலாம் வினா உட்பட

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப் படும்)

---

1. (i) *Van Der Hultes v. The Attorney General* [1989] (1) Sri L.L.R 204 வழக்கின் முக்கியத்துவத்தை விளக்குக.

(ii) விருந்துபசாரமொன்றில் மது அருந்தியிருந்த X என்பவன் அதிகாலையில் வீட்டிற்கு வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். பாதசாரிகள் கடக்குமிடத்தில் காணப்பட்டதான வாகனங்களை நிறுத்துவதற்கான சிவப்பு சமிக்ஞை விளக்கில் வாகனத்தை நிறுத்தாது அவன் சென்றதன் விளைவாக பாதசாரியொருவனை அவன் மோதினான். தான் மது போதையிலிருந்ததன் காரணமாகத் தனக்கு சிவப்பு மற்றும் பச்சை நிறங்களுக்கிடையிலான வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியவில்லையென அவன் வாதிட்டான்

இலங்கையின் குற்றவியல் கோவையின் கீழ் எதிர்வாதமெதற்கும் X உரித்துடையவனா?

(iii) R என்பவன் தன் பல்கலைக்கழக கணனிக் கூடத்தில் காணப்பட்டதான கணனியைப் பாவித்துத் தன் குற்றவியல் சட்ட ஒப்படையைத் தயாரித்தான். R கணனிக் கூடத்திலிருந்து வெளியேறிய உடனே R இனது சக மாணவனொருவனான S என்பவன் அதே கணனியைப் பவித்தான். R இன் ஒப்படையைக் கணனியில் கண்டுகொண்ட S அதனைப் பிரதி செய்தான்.

மேற்கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் குற்றமெதும் புரியப்பட்டுள்ளதா?

(iv) X என்பவனும் அவனது 5 நண்பர்களும் தமது அபிமான நட்சத்திரத்தின் திரைப்படம் ஒன்றிற்கு அது திரையிடப்பட்ட முதல் நாள் சென்றிருந்தனர். குறிப்பிட்ட நேரத்திற்கு வெகுவாக முன்னரே 'கொட்டகை நிரம்பி விட்டது' என்பதான பலகையைக் கண்டு ஏமாற்றமடைந்தனர். கொட்டகைக்கு அவர்கள் கற்களை எறியவே அதன் கண்ணாடிகள் சில உடைந்தன.

X இனதும் அவனது 5 நண்பர்களதும் குற்றவியற் கடப்பாட்டினை ஆராய்க.

(v) குற்றமுறையான நம்பிக்கை மீறல் எனும் குற்றத்தினை நிரூபிப்பதற்கு அவசியமான கூறுகளை விபரிக்க.

2. ஸ்டார் பிஸ்கட் லிமிடெட் (கம்பனி) என்பதன் முன்னாள் ஊழியனான திசேரா என்பவன் பிறழ் நடத்தை காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தான். அவ்விதம் பணிநீக்கம் செய்யப்பட்ட 2 நாட்களின் பின்னர் அவன் கம்பனியின் தொழிற்சாலைக்கு பின்னிரவு நேரத்தில் சென்றான். கம்பனியின் வளவிற்குள் களஞ்சியசாலைக்கு வெளியே அவன் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவரினால் கண்டு பிடிக்கப் பட்டான். அவன் வளவிற்குள் எப்படி நுழைந்தான் என்ற வினாவிற்கோ அல்லது அவன் வந்ததற்கான சரியான காரணத்தையோ அவனால் கூற முடியாதிருந்தமையினால் அவன் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டான். அவனது சட்டைப் பைகளையும் உடமைகளையும் சோதனையிட்டபோது மண்ணெண்ணை அடங்கிய போத்தலொன்றும் தீப்பெட்டியொன்றும் கண்டு பிடிக்கப்பட்டது. ஏதாவது குற்றத்தினைச் செய்ய முயன்றானென திசேரா மீது குற்றஞ்சாட்ட முடியுமா?

தகுந்த கோட்பாடுகள், நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

3. "......................தாம் செய்ததற்கு எவ்வகையிலும் பொறுப்பாக்கப்பட முடியாத நபர்களைக் குற்றவாளிகளாக்குவதற்குப் பாராளுமன்றம் எண்ணவில்லை என்பது நூற்றாண்டுகள் காலமாக இருக்கின்ற ஊகமாகும். அதாவது, குற்றமனம் பற்றி எப்பொழுதாவது வாசகமொன்று மௌனமாகவிருப்பின், பாராளுமன்றத்தின் நோக்கத்திற்கு திறன் கொடுக்கும் பொருட்டு நாம் வார்த்தைகளை குற்றமனத்தைத் தேவைப்படுத்துவதற்குப் பொருத்தமான வார்த்தைகளாக வாசிக்க வேண்டும்......... குற்றமனமானது அவசியமற்றதென்பதற்கான சில காரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டாலன்றி குற்றமனமானது ஒவ்வொரு குற்றத்திற்கும் அவசியமான மூலமொன்றென்பது பல ஆதாரங்களால் உறுதியாக ஸ்தாபிக்கப் பட்டுள்ளது."

Per Lord Reid in *Sweet v Parsley* [1970] AC 132; [1969] 2 WLR 470.

மேற்போந்த கூற்றினை கடும்பொறுப்புக் கோட்பாட்டுடன் தொடர்பு படுத்தி விமர்ச்சித்துப் பகுப்பாய்வு செய்க.

4. ராஜா என்பவன் நீரழிவு நோயாளியொருவனாவான். ஒரு நாள் மாலை அவன் தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது தான் மயக்கமடையப் போவதாக அவன் உணர்ந்தான். மோட்டார் சைக்கிளை நிறுத்திய அவன் அருகிலிருந்த பலசரக்குக் கடையொன்றிற்குச் சென்றான். *Cadburys* சொக்கிளேட் ஒன்றினையும் தகரத்திலிருந்ததான *Red Bull* பானம் ஒன்றினையும் எடுத்துக் கொண்டு அவன் ஓடினான். தேடியபோது அருகிலிருந்த பூங்காவொன்றில் சொக்கிலேட்டையும் பானத்தையும் ருசித்துக் கொண்டிருந்தபோது அவன் கண்டு பிடிக்கப் பட்டான்.

இலங்கையின் குற்றவியற் கோவை மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ராஜாவின் குற்றவியற் பொறுப்பினை ஆராய்க.

5. கிராமமொன்றில் ரெக்ஸ் என்பவன் துர் நடத்தையுடைய ஒருவனாவான். ஒரு நாள் ரெக்ஸின் அயலவனான சோமபால என்பவன் தேங்காய்கள் சில சேகரிக்கும் பொருட்டு ரெக்ஸின் காணிக்குள் வந்தான். சோமபாலாவுடன் நல்ல உறவில் இருக்காத சில்வா என்பவன் இதனைக் கண்டான். உடனடியாக சில்வா, காணியின் புதர்களுக்குப் பினானல் குரங்குகள் சில இருப்பதாகவும் அவை பயிர்களை நாசம் செய்வதாகவும் ரெக்ஸிற்கு அறிவித்தான். ரெக்ஸ் புதரை நோக்கி துப்பாக்கியால் சுடவே புதருக்குப் பின்னாலிருந்த சோமபாலா காயமடைந்தான். துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட்ட இரு அயலவர்களான கமால் மற்றும் நிகாம் ஆகியோர் ரெக்ஸின் காணிக்குள் விரைந்து சென்று அது பற்றி விசாரித்தனர். உடனடியாக வீட்டிற்குள் விரைந்து சென்ற ரெக்ஸ் வாள் ஒன்றினைக் கொண்டு வந்து கமாலின் வலது கையை வெட்டினான். அதன் விளவாகக் கமாலின் கை துண்டிக்கப்பட்டது. கமாலைப் பாதுகாக்க நிகாம் முயலவே நிகாமைத் தாக்கிய ரெக்ஸ் அவனது கண்ணைக் காயப் படுத்தினான். அயலவர்கள் இடையிட்டதனால் சோமபால, கமால் மற்றும் நிகாம் ஆகியோர் அருகிலிருந்த வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சோமபால காயங்களினால் இறந்தான். கமாலின் வலது கை பொருத்தப்பட முடியாதெனவும் நிகாம் தனது கண் பார்வையை மூன்று வாரங்களின் பின்னர் பெறுவானெனவும் வைத்தியர்கள் அறிவித்தனர்.

இலங்கையின் குற்றவியற் கோவையின் கீழ் ரெக்ஸ் மற்றும் சில்வாவினால் புரியப்பட்ட குற்றங்களைத் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

6. (i) ஒரு நாட்டின் தண்டனை சட்டத்தினை திறமையான முறையில் அமுல் படுத்துவதற்குத் தணடனை வழங்குதல் என்பது முக்கியமானதாகும். எனினும் எத் தண்டனையயும் அமுல் படுத்துவதற்கான குறிக்கோள்களைக் காட்டுவதான தெளிவான கொள்கை காணப்பட வேண்டும். இல்லாவிடில் சமுதாயம் தண்டனை வழங்குவதை ஏற்றுக் கொள்ளாது என்பதுடன் குற்றவியல் நீதி முறைமையில் நம்பிக்கையையும் இழக்கும்.

   மேற்போந்த கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? ஆராய்க.

   (ii) குற்றவியல் வழக்குகளில் 'பிழை' எனும் எதிர் வாதத்தினை நிரூபிப்தென்பது அவசியமான மூலக்கூறுகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமெபதைத் தேவைப்படுத்துகின்றது.

   பொருத்தமான தண்டனை சட்டத்தினையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

7. பதின்நான்கு வயது நிரம்பிய கமலா என்பவள் றிகான் என்பவனுடன் சினேகம் கொண்டிருந்தாள். சம்பவ தினத்தன்று யாருக்கும் தெரியாமல் தன்னைச் சந்திக்கும் படி ரிஹன் கமலாவைக் கேட்டிருந்தான். எனினும் கமலா தனது நண்பியான சுமணாவிடம் அது பற்றிக் கூறியிருந்தாள். ரிஹான் தனது மோட்டார் சைக்கிளில் கமலாவை அவளுக்குத் தெரியாத இடமொன்றிற்கு அழைத்துச் சென்றான். அவ்விடத்தில் உட்பிரவேசித்ததும் அது ஒரு விருந்தினர் விடுதியென்பதைக் கமலா அறிந்து கொண்டாள். ரிஹான் அறையொன்றிற்குள் கமலாவை அழைத்துச் சென்ற போது ஏற்கனவே அவனது நண்பர்கள் இருவர் அங்கிருந்தனர். அசௌகரியமாக உணர்ந்த அவள் அவ்விடத்திலிருந்து வெளியேறத் தீர்மானித்தாளாயினும் ரிஹான் கதவினை மூடினான். அவளை மயக்கமடையச் செய்வதற்கான மருந்தொன்றினைத் தனது நண்பர்களின் உதவியுடன் ரிஹான் அவளுக்கு ஊசி மூலம் செலுத்தினான். கமலா வகுப்பு முடிந்து வீடு வராததன் காரணமாக அவளது பெற்றோர் சுமணாவைத் தொடர்பு கொள்ளவே, அவள் ரிஹானுடனான கமலாவின் உறவையும் குறித்த தினத்தன்று அவர்களது சந்திப்பினையும் வெளியிட்டாள். பின்னர் கமலா நினைவிழந்த நிலையில் தெருவோரம் விழுந்து கிடக்கக் காணப்பட்டாள். அவளது உடலில் தெரியக்கூடிய காயங்கள் இருக்கவில்லையாயினும் அவளது சட்டையில் இரத்தக் கறைகள் காணப்பட்டன.

பொருத்தமான ஆதாரங்களைக் காட்டுவதன் மூலம் ரிஹான் மற்றும் அவனது இரு நண்பர்களினது குற்றவியற் கடப்பாட்டினை ஆராய்க.

—